Cr. Misc. 19

# DEPOSITION OF WITNESSES

(Chapter XXIII Code of Civil Procedure)

IN THE COURT OF PRINCIPAL SESSIONS JUDGE, DHARMAPURI

| | |
|---|---|
| Calendar Miscellaneous<br>Preliminary Registered<br>Sessions | Case No. **S.C. No.1 of 2025** |
| Deposition of Witness for | : **PW16(LW18)** |
| Name | : திரு. சீனிவாசன் |
| Father's Name | : குமரேசன் |
| Village | : ஜருகு |
| Taluk | : நல்லம்பள்ளி |
| Calling | : காவல் உதவி ஆய்வாளர் |
| Age | : 34 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **20.11.2025.**

(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**முதல் விசாரணை:**

நான் தற்போது நாமக்கல் மாவட்டம் நாமகிரி பேட்டை காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 01.11.2024ம் தேதி தருமபுரி மாவட்டம் மாரண்டஹள்ளி காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்தபோது மகேந்திரமங்கலம் காவல் நிலையத்தில் குற்ற எண்.121/2024 சட்ட பிரிவு 103 BNS வழக்கின் நானும் தன்னுடன் மகேந்திரமங்கல காவல் நிலைய முதல் நிலை காவலர் மணிகண்டன் என்பவரும் தனி அலுவலாக நியமிக்கப்பட்டோம். அதன் பேரில் வழக்கின் எதிரி

சத்தியமூர்த்தி, த/பெ. ஏறுபள்ளியான் என்பவரை தருமபுரி மாவட்டம், பென்னாகரம் பாப்பாரப்பட்டி இண்டுர் போன்ற பகுதிகளில் தணிக்கை செய்தபோது அவர் மாவட்ட தனி பிரிவு அலுவலகத்தில் இருப்பதாக காவல் ஆய்வாளர் அவர்களுக்கு போன் மூலம் தகவல் தெரிந்ததை அவர் எங்களுக்கு தெரிவித்து மேற்படி எதிரி சத்தியமூர்த்தி என்பவரை மாவட்ட தனி பிரிவு அலுவலகத்திலிருந்து மகேந்திரமங்கலம் காவல் நிலையத்திற்கு அழைத்து வர உத்தரவிட்டதன் பேரில் மாவட்ட தனி பிரிவு அலுவலகத்திற்கு சென்று எதிரி சத்தியமூர்த்தி என்பவரை பணி காவல் செய்து மகேந்திரமங்கலம் காவல் நிலையத்திற்கு அழைத்து சென்று 16.00 மணிக்கு காவல் ஆய்வாளர் அவர்களிடம் பாதுகாப்பாக ஒப்படைத்தோம். இது சம்மந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)**</u>

எதிரியை அழைத்து வந்த அன்று எஸ்பி ஐ நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். தனி பிரிவு ஆய்வாளர் அன்பழகன் என்பவர் எதிரியை என்னிடம் வழி காவலுக்கு கொடுத்தார். எதிரியை நான் அழைத்து வந்தபோது தனி பிரிவு அலுவலகத்தில் எழுதி கொடுத்தோம். நான் மட்டும் எழுதி கொடுத்தேன். பொதுவாக எதிரியை வழி காவலுக்கு உட்படுத்தும்போது காவலர்கள் இருவரும் கையெழுத்திட வேண்டும் என்றால் என்னுடன் வந்த மணிகண்டன் வாகனத்திலேயே இருந்தார், நான் மட்டும்தான் அலுவலகம் சென்று கையொப்பம் செய்து எதிரியை அழைத்து வந்தேன். இந்த விவரத்தை

காவல் ஆய்வாளர் என்னை விசாரித்த போது சொன்னேன். நான் மட்டும் கையெப்பம் இட்டு எதிரியை அழைத்து வந்ததாக குறிப்பாக என்னுடைய விசாரணை வாக்குமூலத்தில் இல்லை. எஸ்பி அலுவலகத்தில் உள்ள தனி பிரிவு அலுவலகத்தில் எதிரி இருந்தார். நான் சொல்வதுபோல் தனி பிரிவு அலுவலகத்தில் எதிரி இல்லை என்றும் நான்கு நாட்கள் கழித்து வேண்டுமென்றே வழக்கிற்காக அவர் சரணடைந்ததாக அரசு தரப்பிற்கு ஏற்றவாறு சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன தேதியில் சொன்ன இடத்தில் எதிரி சரணடையவில்லை என்றும் அவரை மகேந்திரமங்கலம் காவல் நிலையத்திற்கும் அழைத்து செல்லவில்லை என்றால் தவறு.

<u>மறு விசாரணை</u>– இல்லை

Taken down by me in the presence of Accused. Readover to the witness and admitted by the witness as true and correct and signed in my presence on 20.11.2025.

THIRUMAGAL C Digitally signed by THIRUMAGAL C Date: 2025.11.20 16:30:28 +0530
Principal Sessions Judge,
Dharmapuri.